பெருநகர குற்றவியல் நடுவர் 4 வது விரைவு நீதிமன்றம், ஜார்ஜ் டவுன், சென்னை –1.

வழக்கு வரிசை எண்.2868/2019

<u>**எதிரி தரப்பு 1 வது சாட்சி**</u> நாள்.20.01.2023

பெயர் – கிஷோர்டி கண்ணா

<u>**கூடுதல் முதல் விசாரணை (சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு கூடுதல் முதல் விசாரணை ) (சத்திய பிரமானத்தின் பெயரில்)**</u>

1. நான் என்னுடைய மொபைல் போனிலிருந்து அரவிந்சராப்க்கு வாட்சப் மூலம் Message அனுப்பினேன். நாங்கள் வழக்கமாக வாட்சப்பில் Message அனுப்புவது உண்டு. ஏதேனும் காசோலையை அதில் குறிப்பிட்ட தேதிக்கு பிறகு வசூலுக்குபோட வேண்டும் என்றால் நான் அவருக்கு Message அனுப்புவேன். அவரும் அதற்கு பதில் Message அனுப்புவார். 11.07.2018 தேதியில் நான் அரவிந்சராப்க்கு ரூ.2 லட்ச ரூபாய் காசோலையை 16.07.2018 தேதியில் வசூலுக்கு போடுமாறு Message அனுப்பினேன்.

2. மேலும் அன்றைய தினமே மாலையில் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து பணம் வசூல் செய்துகொள்மாறும் தெரிவித்துயிருந்தேன். அதற்கு உடனடியாக அவர் சரி என்று Message அனுப்பியுள்ளார். 11.07.2018 தேதியில் அரவிந்சராப்க்காக அவருடைய ஊழியர் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து பணம் வாங்கி சென்றார்கள். அதன் பிறகு நான் அவருக்கு பணம் கொடுத்ததற்கு ஆவணம் உள்ளதால் என்றால் வழக்கமாக பணம் கொடுப்பதற்கு ஆவணங்கள் எதுவும் வைத்துகொள்வதில்லை.

3. நான் என்னுடைய மொபைல் போனிலிருந்து வாட்சப் Message யைக் Screen short எடுத்து அதனை ஜெராக்ஸ் கடைக்கு சென்று அதனை Print போட்டு தாக்கல் செய்கிறேன். அதற்காக ஜெராக்ஸ் கடையில் சீல் வாங்கி என்னுடைய சான்றிதழை அதனோடு இணைத்து தாக்கல் செய்கிறேன். **(மேற்படி ஆவணத்தை எ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்ய கோரப்படுகிறது. மேற்படி ஆவணம் வழக்கிற்கு தொடர்பற்றது என்றும் ஏற்கதக்க ஆவணம் அல்ல என்றும் கூறி புகார்தாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்படுகிறது. ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு**

**செய்யப்படுகிறது. ஆட்சேபனை குறித்து வழக்கு முடிவில் தீர்மானிக்கப்படும்.)**

4. நான் அவருடன் தொடர்ச்சியாக கொடுக்கல் வாங்கல் வைத்து கொண்டதை காட்டுவதற்காக மேற்படி ஆவணம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய குற்றமில்லா தன்மையை நிருபிக்க நான் தாக்கல் செய்கிறேன். நான் என்னுடைய 6 எண்ணிக்கை கொண்ட வங்கி பாஸ் புத்தகங்களை தாக்கல் செய்கிறேன். **(மேற்படி 6 எண்ணிக்கை கொண்ட அசல் பாஸ் புத்தகங்கள் எ.சா.ஆ 3 வரிசையாக குறியீடு செய்யப்படுகின்றன.)** மேற்படி ஆவணங்களையும் நான் என்னுடைய கட்சியை நிருபிப்பதற்காக தாக்கல் செய்கிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் தாக்கல் செய்த பாஸ் புத்தகத்தில் 11.06.2018 தேதியில் ரூ.13,02,000/- அரவிந்சராப் அன்சன்ஸ் என்ற ஒரு கணக்கிலிருந்து என்னுடைய கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். 01.03.2018 தேதியிலும் மேற்படி கணக்கிலிருந்து ரூ.8,75,000/- வந்துள்ளது. 27.08.2018 தேதியில் மேற்படி கணக்கிலிருந்து எனக்கு ரூ.12,77,500/- வந்துள்ளது. எ.சா.ஆ 2 ல் கண்ட Printout ல் மேலே ஒரு மொபைல் போன் எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி Printout ல் அரவிந்சராப்பின் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் என்னுடைய மொபைலில் அவருடைய பெயர் இருந்தது, பெயருடன் எடுத்தால் அவருடைய எண் நிருபணம் ஆகாது என்பதற்காக நான் தான் Edit செய்து அவ்வாறு Print எடுத்தேன். நான் என்னுடைய மொபைல் போனை எடுத்துவந்துள்ளேன். தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். மேற்படி எ.சா.ஆ 2 ல் Blank க்காக உள்ள விவரம் என்ன என்றால் அது அரவிந்சராப் எனக்கு அனுப்பிய ஒரு Message. அந்த Message ல் உள்ள விவரங்கள் என்னுடைய போனில் சில காலம் ஆனதால் அழிந்துவிட்டது. அதனால் அது என்ன என்று தற்சமயம் சொல்ல முடியாது.

3. நான் அனுப்பிய Message க்கு உடனடியாக பதில் அளித்ததாக சொல்லியுள்ள நிலையில் அதில் கண்டுள்ளவாறு மாலையில் பணம் பெற்று கொண்டதாக Message எதுவும் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். நான் வழக்கை பொய்ப்பிப்பதற்காக எ.சா.ஆ 2 ஆவணத்தை தயார் செய்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் தரப்பில் ரொக்கமாக எந்த பணபரிவர்த்தனையும் மேற்கொள்வது இல்லை என்றும், நான் பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.